සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 (I)

# Efficiency Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service - 2018 (I)

## (01) பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள்
## General Management and Establishments Activities

ஒரு மணித்தியாலமும் முப்பது நிமிடமும்
One hour and thirty minutes

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

---

**1.** (i) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பாராளுமன்றத்துக்கு பொறுப்பு கூறவேண்டிய விதத்தை நடைமுறை விதிகளின் துணையோடு விளக்குக.

(ii) அரசாங்க ஆணைக்குழுவினால் அதிகாரப் பகிர்வு செய்யப்பட்ட ஒரு அதிகாரியின் நடைமுறை அதிகாரத்தால் செய்யக்கூடிய நியமனங்கள் எவையெனக் குறிப்பிடுக.

**2.** (i) அரசாங்க சேவையில் நியமனம் செய்வது தொடர்பான தகுதியீனங்கள் எவையெனக் குறிப்பிடுக.

(ii) தகுதிகூர்நிலை காலப்பகுதியின் கீழுள்ள அலுவலர் தொடர்பாக நியமிப்பு அதிகாரமுடைய அதிகாரியின் பொறுப்புகளை விளக்குக.

**3.** பின்வரும் பதங்களுக்கான கருத்தை விளக்குக.

(i) பதிலீட்டாளர்

(ii) அமைய அலுவலர்

(iii) ஒப்பந்த அடிப்படை அலுவலர்

(iv) நிரந்தர அலுவலர்

**4.** (i) இடமாற்ற சபையினூடாக செயற்படுத்தப்படாத இடமாற்றங்கள் எவையெனக் குறிப்பிடுக.

(ii) அரசாங்க சேவைக்கு அப்பாற்பட்டதொரு சேவைக்காக அலுவலர் ஒருவர் தற்காலிகமாக விடுவிப்பு செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதிகாரம் செலுத்துகிற நிபந்தனைகள் எவையெனக் குறிப்பிடுக.

**5.** (i) ஓய்வுபெற்றதன் பின்பு அரசாங்க சேவையை விட்டு விலகிச் செல்கிற அலுவலர் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற சேவைச் சான்றிதழில் உள்ளடக்கப்படக்கூடிய விபரங்கள் எவையெனக் குறிப்பிடுக.

(ii) இராஜினாமா செய்வதற்காக அரசாங்க அலுவலர் ஒருவரால் விண்ணப்பமொன்று அனுப்பப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் திணைக்களத் தலைவர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை குறிப்பிடுக.

**6.** (i) அலுவலர் ஒருவருக்கு காலங்கடந்த விடுமுறையை அனுமதிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை எனக் குறிப்பிடுக.

(ii) (அ) அரசாங்கத்துக்கு நிறைவேற்றிய சேவைக்காக அரசாங்க அலுவலர் ஒருவர் கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் எவையெனக் குறிப்பிடுக.

(ஆ) மாவட்ட நீதிமன்றம், மஜிஸ்ரேட் நீதிமன்றம் போன்றவற்றின் செயற்பாடுகளுக்குரியதாக அரசாங்க அலுவலர்களுக்கு கட்டணம் அறவிடக்கூடியது என்ன பணிகளுக்கு எனக் குறிப்பிடுக.

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 (I)

# Efficiency Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service - 2018 (I)

## (02) நிதி ஒழுங்குக் கோவை
## Financial Regulations

ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்
One hour and 30 minutes

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** (i) திரட்டுநிதிக்கு செலவு வைக்கப்பட்ட அரச வருமானத்தை மீளளிப்பதற்கு ஏற்படும் சந்தர்ப்பங்கள் நான்கைக் குறிப்பிடுக.

(ii) அரசின் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்கும் போது ஈடுபடுத்தப்படும் நிதியளிப்பு மூலங்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக.

(iii) நிதி ஒழுங்குவிதி 108 இன் படி நட்டத்தை கையாளும் அதிகாரிகளைப் பெயரிடுக.

**2.** (i) அரசின் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப்படும் பிரதான மதிப்பீட்டு வகைகளைக் குறிப்பிடுக.

(ii) அரச செலவின மதிப்பீடுகளில் மாற்றம் செய்வதற்காக பயன்படுத்தப்படும் வீரமன் நடைமுறையில் **பொருத்தமற்ற** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

**3.** (i) நிதி ஒழுங்குவிதி 102(2) இன் படி நட்டம் என்னும் பதத்திற்கு **உட்படாத** நட்டத்தின் வகுதிகளைக் குறிப்பிடுக.

(ii) நட்டம்/சேதம் இடம்பெறும்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை எனக் குறிப்பிடுக.

**4.** (i) ஆளுக்குரிய வேதனாதிகளை கொடுப்பனவு செய்வதற்கு அதிகாரம் அளிக்கும் உத்தியோகத்தரினால் திருப்திப்படவேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) அரச வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் மீண்டுவரும் செலவின விடயத்தின் கீழ் பொருளாதார வகுத்தீடுகள் **ஐந்தைக்** குறிப்பிடுக.

(iii) முற்பண கணக்கு நடவடிக்கைகளில் குறிப்பிட்ட எல்லைகளை மீறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு சேர்த்துக் கொள்ளக் **கூடாத** கொடுக்கல் வாங்கல்கள் யாவை எனக் குறிப்பிடுக.

**5.** (i) அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் ஒருவரினால் ஒப்பந்தம் சம்பந்தமாக 'பிடித்து வைத்த பணம்' விடுவிப்பதற்கு முன்னர் கருத்திற் கொள்ளக்கூடிய விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) திரட்டு நிதியிலிருந்து செலவை மேற்கொள்வதற்கான ஒதுக்கீடுகள் பிரதானமாக இரு வகைப்படும். அந்த **இரண்டு** வகைகளையும் குறிப்பிடுக.

(iii) அரச திணைக்களமொன்றில் கொடுப்பனவு நடவடிக்கையின் போது கடைப்பிடிக்கவேண்டிய சட்டதிட்டங்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக.

**6.** சுருக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(i) ஒதுக்கீட்டுச் சட்டம்

(ii) விசேட ஆணைச்சீட்டு

(iii) திரட்டு நிதியம்

(iv) ஆரம்ப அறிக்கை

(v) ஆளுக்குரிய வேதனாதிகள்

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 (I)**

Efficiency Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service - 2018 (I)

**(03) கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டம்**
Educational Reforms and Education Law

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

முதலாவது வினா உட்பட நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. (i) 1972 ஆம் ஆண்டின் கல்வி மறுசீரமைப்பின் கீழ் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சை மற்றும் கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சை ஆகியவற்றுக்கு பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட பரீட்சைகளைப் பெயரிடுக.

 (ii) தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் (1992) குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பொது இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் பொது தேர்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் **நான்கைப்** பெயரிடுக.

 (iii) தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை தேசிய கல்விக் கொள்கையாக ஏற்றுக்கொள்வதற்கு பின்பற்றப்படும் செயலொழுங்கு யாது?

 (iv) 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனைகள் வழங்குவதற்கென இரண்டு ஆலோசனைக் குழுக்களை நிறுவுவதற்கு அதிகாரம் உள்ளது. அக்குழுக்கள் **இரண்டினையும்** பெயரிடுக.

 (v) 1997 ஆம் ஆண்டின் கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ் பாடசாலைகளில் உள்ள கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளுக்கு தரங்கள் (வகுப்புக்கள்) ஒதுக்கப்பட்டுள்ள முறையினை குறிப்பிடுக.

 (vi) 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டிருந்த தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபையின் தற்போதைய நிலைமை என்ன?

 (vii) 1972 ஆம் ஆண்டின் கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட முன்தொழில் வாண்மை - I முன்தொழில் வாண்மை - II பாடங்களுக்குப் பதிலாக 1981 கல்வி மறுசீரமைப்பில் கனிஷ்ட இடைநிலை மற்றும் சிரேஷ்ட இடைநிலை பிரிவில் அறிமுகம் செய்து முன்வைக்கப்பட்டுள்ள பாடங்கள் எவை?

 (viii) பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தின் மூலம் அமைக்கப்படும் மாகாண அமைச்சுக் குழுக்களின் தொகுப்பினை விளக்குக.

 (ix) மாகாண சபையினூடாக குறித்த மாகாணத்திற்கான சட்டங்களை எந்த விடயங்களுக்கு கொண்டிருக்க முடியும்?

 (x) இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசின் அரசிலமைப்பு சட்டத்தின் 3 ஆவது அத்தியாயத்தின் கீழ் எந்தவொரு பிரசையும், தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு உள்ளதாக அல்லது அவை மீறப்படுவதற்கான குறைந்தபட்ச சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன எனக் கருதுகின்ற போது, அவன் / அவளினால் எடுக்கக் கூடிய நடவடிக்கை யாவை?

*(04 x 10 = 40 புள்ளிகள்)*

2. (i) 1997 கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ் ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தின் செய்யப்பட்ட மாற்றங்களின் படி ஆரம்பக் கல்வி பிரதான மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. **அம்மூன்று** கட்டங்களையும் அவ்வொன்றுக்குமான தரங்களையும் குறிப்பிடுக.

 (ii) மேற்கொண்ட மறுசீரமைப்பின் கீழ் ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தில் **நான்கு** பிரதான பாடத் தொகுதிகள் உள்ளன. அவை யாவை?

 (iii) மேற்கொண்ட மறுசீரமைப்பின் கீழ் ஆரம்ப பிரிவில் ஆங்கில மொழி கற்பித்தலுக்கான ஏற்பாடுகள் யாவை?

 (iv) ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது பயன்படுத்தப்படும் கற்றல்' - கற்பித்தல் முறைமைகள் **மூன்று** வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை யாவை?

*(20 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க.

3. (i) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஆசிரியர் கல்விக் கல்லூரி சட்டத்தின் கீழ் ஆசிரிய கல்விக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்காக கல்வி அமைச்சின் மூலம் வெளியிடவேண்டிய கட்டளையில் உள்ளடங்கும் விடயங்கள் எவை?

(ii) ஆசிரிய கல்விக் கல்லூரியின் கல்விச் சபையின் கூட்டினைக் குறிப்பிடுக.

(iii) ஆசிரிய கல்விக் கல்லூரியின் பீடமொன்றின், பீடாதிபதியின் தொழிற்பாடுகள் எவை?

(iv) ஆசிரிய கல்விக் கல்லூரிகளின் பிரதான ஆணையாளர் நாயகத்தின் வகிபங்கினையும் தொழிற்பாடுகளையும் விளக்குக.

*(20 புள்ளிகள்)*

4. (i) 'பாடசாலை மட்ட மதிப்பீடு' எனும் எண்ணக்கருவினை சுருக்கமாக விளக்குக.

(ii) பாடசாலை மட்ட மதிப்பீட்டிற்காக பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு நுட்பங்கள் **ஐந்தினைப்** பெயரிடுக.

(iii) பாடசாலை மட்ட மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது எழுகின்ற பிரச்சினைகள் **இரண்டினை** விளக்குக.

(iv) பாடசாலை மட்ட மதிப்பீட்டின் கீழ் மாணவ குழுவொன்றை களப் பயணத்தில் ஈடுபடுத்துவதற்கான கற்றல் பேறுகள் யாவை?

*(20 புள்ளிகள்)*

5. (i) தேசிய கல்வி நிறுவகம் தாபிக்கப்பட்டதன் நோக்கங்களை சுருக்கமாகக் குறிப்பிடுக.

(ii) தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் சபையின் அதிகாரங்கள் யாவை?

(iii) தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் வகிபங்கினை சுருக்கமாக விளக்குக.

(iv) தேசிய கல்வி நிறுவகத்திற்கு நிதி கிடைக்கும் மூலங்களை பெயரிடுக.

*(20 புள்ளிகள்)*

***